Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி:சதம் 10]

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] வாற்பாணம்:- சார்வரி ௵ சித்திரை ௴ உசஉ வெள்ளிக்கிழமை (6 MAY. 1960) [இல-ரு]

# நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நலந்திகழ் சைவமகாநாடு

## பேராசிரியர்கள் நூலாசிரியர்கள் ஆராய்ச்சியாளர்களின் பயன்செறிந்த பேச்சுக்கள்

### தேவாரபாராயணச் சிறப்பு தேர்வில்விளங்கியவர்களுக்குப் பரிசில்

புத்தாண்டிலே சித்திரைத் திங்களிலே அத்தன் அருளாலே சைவ நெறி தாரணியிற் பரப்பிக் காப்பாற்றும் நோக்கமாக வழமையாகக் கூடும் சைவமாநாடு சென்ற வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்றுநாட்கள் சிறப்புடன் நடைபெற்றது.

நாவலர் மண்டபத்தில் இக்கத் தெய்வப் பணி நடைபெறுதல் மிக மிகப் பொருத்தமானதென்றும் பல்லாண்டுகளாக நாவலர்ஐயா அவர்களின் நற்றொண்டைத் தொடர்ந்து ஆற்றிவரும் சைவபரிபாலனசபையாரின் ஊக்கமும் உணர்ச்சியும் போற்றப்படவேண்டும் என்றும் மாநாட்டை ஆரம்பித்து வைத்துத் தலைமையுரை நிகழ்த்திய கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். தலைமை தாங்குவது ஒரு பெரும் பொறுப்பு என்றும் பரமேசுவரனே தனித்தலைமை தாங்கும் ஆற்றல் படைத்தவன் என்றும் ஆனல் அவன் அருளாலேயே எல்லாம் நிகழ்வன ஆகையால் இறைவன் திருவருளை முன்னிட்டு எவரும் தலைமை தாங்கும் பொறுப்பை ஏற்றால் ஓரளவுக்கு அப்பணியை மனச்சான்றுக்கமைய ஆற்றும் துணிவைப்பெறுவர். என்றும் ஸ்ரீ ஜகந்நாதன் அவர்கள் எடுத்துரைத்துத் தலைமையுரையை நிகழ்த்தினர். (இவ்வுரையின் விரிவு பிறிதோர் பக்கத்திற் காண்க.)

இசைப்புலவர் திரு. க. செல்வத்துரை அவர்களின் தேவார பாராயணத்தின் பின் மாநாட்டுச்செயலாளர் திரு மு. மயில்வாகனம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினர். (வேறோரிடத்தில் இது பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது). சைவஅன்பர்கள் மேலதிகமான அபிமானம் காட்டிச் சமயப் பணி செய்யும் சபைகளுக்கு நல்லாதரவு அளித்தல் அவசியம் என்று செயலாளர் வேண்டிக் கொண்டனர்.

பண்டிதர் க. நமசிவாயம் அவர்கள் வரவேற்புப் பா பாடினர்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

### நற்சிந்தனை

என் செயல் யாதொன்று
மில்லை யாவும்
உன் செயல் என்றே
யுணர்ந்தேன் யானே.

முன் செய்த தீவினை
முற்றும் வெந்தன
பின் செய்யும் தீவினை
பிறவா வெனக்கே.

(சிவ தொண்டன்)

### சமயச் சொற்பொழிவு

காஞ்சீபுரம் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் சைவ சித்தாந்தசரபம் உயர்திரு க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் நிகழும் சார்வரி வருஷம் சித்திரை மாதம் 28-ந் திகதி (10-5-60 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் "சிவலிங்க வழிபாடு" என்னும் பொருள்பற்றிச் சிறந்த ஆய்வுச் சொற்பொழிவொன்று நிகழ்த்துவார்கள்.

## சைவ மகாநாட்டால் நாமடையும் நலன்கள்

### சைவ பரிபாலன சபையின் பலதிறச் சேவை

[அகில இலங்கைச் சைவமகாநாட்டில் சமயப்பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனமவர்கள்நிகழ்த்தியவரவேற்புரை

சிவநேயச் செல்வர்களே,
செல்விகளே!

ஐந்து கரத்தானை
யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை
போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை
ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி
போற்றுகின்றேனே.

வேற்றாகி விண்ணாகி
நின்றாய் போற்றி
மீளாமே யாளென்னைக்
கொண்டாய் போற்றி
ஊற்றாகி யுள்ளே
யொளிந்தாய் போற்றி
யோவாத சத்தத்
தொலியே போற்றி
யாற்றாகி யங்கே
யமர்ந்தாய் போற்றி
யாறங்கம் நால்வேத
மானாய் போற்றி
காற்றாகி யெங்கும்
கலந்தாய் போற்றி
கயிலை மலையானே
போற்றி போற்றி.

ஆலமே யமுதாக வுண்டு
வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டற்
காய்ந்தனை யடியேற் கின்று
ஞாலநின் புகழேயாக
வேண்டு நான்மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற்
சிவபெருமானே யென்றார்.

எங்கள் சைவபரிபாலன சபை நமது ஈழநாட்டில் சைவத்தொண்டும் தமிழ்மொழித்தொண்டும் புரிவதற்காக இற்றைக்கு 72 வருடங்களுக்கு முன் நமது நாட்டில் ஐந்தாம் சமய குரவராகத் தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களுடைய சீடர்களாலும் அபிமானிகளாலும் தாபிக்கப்பெற்றது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியையும் இச்சபையே ஆரம்பித்து நடத்திவந்து 1905-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிகார சபையென்ற ஒரு சபையை நிறுவி அச்சபையினிடம் கல்லூரி நிருவாகத்தை ஒப்படைத்தது. இந்துசாதனம் தமிழ் ஆங்கிலப் பிரசுரங்களாகிய பத்திரிகைகளை வெளியிட்டு அவற்றின்மூலம் சிறப்பாகத் தமிழ்மக்களதும், பொதுவாக இலங்கை மக்களதும் உரிமைகளையும் நலனையும் பாதுகாத்தும் சைவப்பிள்ளைகள் சைவசமய உண்மைகளைக் கற்றுணர்ந்தொழுக சமயபாடப் புத்தகங்களையும் தோத்திரங்களையும் தமிழ்மொழி வளர்ச்சிக்காகப் பாலபாடங்களையும் பிற நூல்களையும் வெளியிட்டும் சைவசமய விருத்தியையும் தமிழ்மொழி ஆக்கத்தையும் ஓம்பியும் வருகின்றது.

ஊர்கடோறும் சைவசமய உண்மைகளைப் பரப்புவதற்காகச் சமயப் பிரசாரகர்களை நியமித்துச் சைவத்தொண்டாற்றி வருகின்றது தாய் நாடாகிய இந்தியாவிலிருந்து சைவப் பேரறிஞர்களையும நமது நாட்டில் உள்ள சைவப் புலவர்களையும் அழைத்து இத்தகைய சைவ மகாநாடுகளை நடத்தி வருகின்றது. சைவமக்கள் எல்லோரும் பரந்த சைவசமய நூல்களைக் கற்றுணர வசதியில்லை. அவற்றை ஆழமாகவும்

தொடர்ச்சி 5-ம்பக்கம்

### அன்பர் அகம் அளந்த அண்ணலார்

"அன்பர் அகம் அளந்த அண்ணலார்" என்ற பொருளில் அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் திரு நா. ஞானசம்பந்தன் சொற்பொழிவாற்றுப்போது சுந்தரமூர்த்தி நாயனர், பூசலார் நாயனர் முதலிய அடியார்களின் அகத்தைச் சேக்கிழார் சுவாமிகள் அளந்து பாடியமையை எடுத்துக்காட்டுகளுடன் நன்கு விளக்கினர் பூசலார் நாயனர் வாழ்ந்த ஊரில அரசன் சிவபிரானுக்குக் கற்கோயில் அமைத்தாரென்றும், பூசலாரும் அகத்திலே சிறந்த கோயிலமைத்தாரென்றும், இரு கோவில்களிலும் கும்பாபிஷேக தினம் ஒரே நாளில் அமைந்ததென்றும், அப்போது சிவபிரான் அரசனுக்குக் கனவில் தோன்றி தான் பூசலார் நாயனருடைய கோயிலுக்குப் போவதாகக் கூறியருளினர் என்றும் குறிப்பிட்டு இறைவன் மெய்யன்போடு தன்னை நினைப்பவர்களுக்கு விரைந்து அருள் செய்வாரென்று விளக்கினர்.

## ஆரறிவார் எங்கள் அண்ணல்பெருமையை

### மந்திரமும் தந்திரமுமாகும் திருமந்திரம் தரும பெரும் பொருள்

[அகில இலங்கைச் சைவமகாநாட்டில் திருமந்திரம் என்னும் பொருளில் ஸ்ரீமத். கி. வா. ஜகந்நாதனவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே" என்பர். திருமூலர் இந்த நல்நோக்கத்துடனே பிறந்தவர். வேர், இலை முதலிய பல பகுதிகளை யுடையது மரம். ஆனல் எல்லாவற்றையும் மரம் என்றுதான் சொல்கிறோம். ஆனல் அதன் வேரைப்பற்றி அறிந்தால் ஒருவன் முழுவதையும் அறிவதற்கு மூலகாரணமாகும். எனவே திருமூலர் அவையடக்கத்திலே 'யாரறிவார் எங்கள் அண்ணல் பெருமை',

யாரறிவார் அதன்
அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர்
ஒன்றதின்
வேரறியாமை விளம்புகின்
றேனே.

என்று கூறியுள்ளார்.

மந்திரம் என்பது மனதில் நினைப்பாரின் பாசத்தை நீக்க வல்லது. தந்திரம் என்பது கிரியாமார்க்கம் ஆகமங்கள் என்றும் கூறலாம். வேதமும் ஆகமமும் ஒன்றற்கொன்று தொடர்புடையவை. பசு இல்லாமல் பால் இல்லை; அதுபோல வேதம் இல்லாமல் ஆகமம வராது. வேதம் நலநீர் உள்ள ஒரு தடாகமாயிருந்தால் ஆகமம் அந்தத் தடாகத்திற்கு இறங்கிச் செல்லும் படித்துறைகள் இவை இரண்டும் கலந்ததுதான சைவம். இதனலே சேக்கிழார் "மிகு சைவத்துறை விளங்க" என்று கூறினர். இதனலே திருமந்திரத்தின் உள் பிரிவு தந்திரங்களாக வகுக்கப்பட்டுள்ளது.

மூவாயிரம் பாடல்களைப் பாடிய திருமூலரை ஒரு சித்தர் ஒன்று சொல்லலாம், புலவர் என்று சொல்லலாம், அநுபூதியடைந்தவர், யோகி என்றும் சொல்லலாம். அவர் இயற்றிய பாடல்களிலே தந்திரம் உண்டு, மந்திரம் உண்டு, யந்திரம் உண்டு. [illegible] பொருள்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எங்கள் அறிவித்தல்

சித்திரை 28 உ செவ்வாய்க்கிழமை (10-5-60) சித்திரைப் பூரணை விரதத்தின் பொருட்டு சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையும், இந்துசாதனக் காரியாலயமும் மூடப்பட்டிருக்குமென்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

—அதிபர்.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சார்வரி ௵ சித்திரை ௴
உசவ வெள்ளிக்கிழமை


## புனித நிலத்தைப் பழுது படுத்தாதீர்

புண்ணிய தீர்த்தம் என்று பூவுலகிற் புகழ் பெற்றிலங்கும் கீரிமலைச் சாரலிலிருந்து கிழக்குப் பக்கமாகக் கடற்கரையோரமாகத் தொன்மை மிச்க கதிரை ஆண்டவர் கோயில் வரைக்கும் உள்ள நிலப்பரப்பு புனிதமும் தெய்வத்தன்மையும் வாய்ந்ததென்பதை ஆங்குள்ள அற்புத வரலாற்று மகிமை பொலிந்த பற்பல ஆலயங்களும் சமாதிகளும் நன்னீரூற்றுகளும் சான்று பகர்ந்து உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய உத்தம பூமியின் புனிதத்தைப் போக்கித் தெய்வச் சால்பை மாற்றித் தொழிற்சாலைக்குரிய வேலை நிலமாக்க வேண்டுமென்று அரசினர் திட்டமிட்டிருப்பதாக அறிந்த சைவாபிமானிகள் சைவமகாநாட்டின் மூலமாகத் தங்கள் உள்ளக்கிடக்கையை எடுத்துரைத்திருக்கின்றனர். காங்கேயன்றுறையிலுள்ள தொழிற்சாலை யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் தூசியைக் காற்றோடு பரப்பிப் பயிர்வகைகள் விலங்கினங்களோடு மனித வர்க்கத்தின் விருத்திக்கும் பங்கம் விளைவிக்கின்றதென்றும் காசநோய்க்குக் காரணமாயித் தூசி இடையூறுசெய்கின்றதென்றும் உடற்கூற்று நலன் ஆராயும் வல்லுநர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். அவ்வாறாக அமைந்திருக்கும் சாலை குடியானவர்கள் வாழ்கின்ற மனைகள் மத்தியில் இயங்குவது ஒவ்வாதென்ற எண்ணம் உதிக்கும் வேளையில் அச்சாலையை விருத்தி செய்து அணித்தாகவுள்ள நிலத்தையும் பயன்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் கருதுவது விந்தையாயிருக்கின்றது. மக்களின் உடல் நலம் பாதிக்கப்பட்டு வருவதை ஆட்சியாளர் அறியாமலிருக்கலாம். ஆகவே ஆட்சியாளர்களுக்கு இந்தத் தொழிற்சாலையால் விளையும் இடையூறுகள் இவை என்பதையும் முக்கியமாக நோயாளர் வைத்தியசாலைக்கருகில் இச்சாலையிருப்பது ஆகாதென்பதையும் பொறுப்பு வாய்ந்தவர்கள் விளக்கிக் காட்டுதல் வேண்டும்.

இதற்கிடையில் உடல் நலத்திலும் மேலான உயிர் நல நோக்கம் ஒன்று உண்டு, இம்மைக்கும் மறுமைக்கும் பயனளிக்கும் வாழ்க்கைக்குரியன ஆலயங்கள், மடங்கள் புண்ணிய தீர்த்தங்கள். இவையெல்லாம் ஒருங்கமைந்துள்ள புனித பூமியாகிய கீரிமலையும் அதன் சாரலும் சைவ மக்களுக்கு உயிர் போன்றவை. நன்னெறி ஒழுக்கத்துக்குரிய நிலத்தை அந்நெறிக்குப் பயன் பெறவிடாது வேறு தேவைகளுக்குரியதாக்குதல் சிவநிந்தையாகும். இப் பழி இயற்றப்படுவதைச் சைவ மக்கள் பார்த்துக்கொண்டு வாளா இருக்கமாட்டார்கள். பொதுவாக எச்சமயத்தவர்களும் தங்கள் வழிபாட்டுக்குரியனவாயமைந்திருக்கும் நிலத்தை மாசுபடுத்த ஒருப்படுவார்களா. ஆகவே, தொழிற்சாலை விருத்தியைப் பற்றி ஆழ்ந்து ஆராய வேண்டிய வேளையில் அணித்தாகவுள்ள புண்ணிய பூமியையும் பங்கப்படுத்த எண்ணுதல் பழிச்செயலாகும். சைவ மக்களின் வேண்டுகோள் நியாயமானதும் நீதியானதும் என்பதை அரசினர் மறுக்கமுடியாது. புனித நிலத்தைப் பேணுதல் மக்களின் கடமைமட்டுமன்று அரசினரின் கடமையுமாகும்.

## நல்லூரில் இசைவிழா

நல்லூர்க் கந்தன் கோயில் வடபாலமைந்த தேரோடும் வீதியில் அகில இலங்கைச் சங்கீத வித்வ சபையார் நடத்தும் இசை விழாக் காட்சி கவின்பெற்றிலங்குகின்றது. முத்தமிழ் நாடாய் விளங்கும் யாழ் நாட்டிலே தெய்வ மணங் கமழும் ஆலயமுன்றிலிற் பக்திப்பாடல்கள், பண்ணும் இசையும் பண்பும் அமையப் பாடப்பெறுவது கேட்போர் உள்ளத்தில் இறை உணர்ச்சியை எழுப்பிய வண்ணமாய் சைவத்தொண்டாய் அமைகின்றது. எந்தை புகலூர்பாடும் இசைவிழா இயலபாய் எழிலும் அணியும் பொருந்தி இலங்கும். வாழ்க முத்தமிழ்.

# மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்த பௌதிக சாத்திர உண்மைகள்

[சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. த. முத்துச்சாமிப் பிள்ளையவர்கள் சைவ மகாநாட்டின் மூன்றும் நாள் பிற்பகல் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்து ஆற்றிய பேருரையின் சாரம்]

அகில இலங்கைச் சைவ மகாநாட்டின்முதலாம் இரண்டாம் நாட்களில் ஸ்ரீமத் கி. வா. ஜகந்நாதன் அவர்களும், ஸ்ரீமத் க. வச்சிரவேலு முதலியாரவர்களும் தலைமை வகித்தும் சொற்பொழிவாற்றியும் மகாநாட்டைச் சிறப்பித்தார்கள். மூன்றாம் நாள் முற்பகல் ஸ்ரீமதி இரத்தினம் நவரத்தினம் அவர்கள் தலைமை வகித்து மகாநாட்டை நடத்தியதோடு திருவாசகம் என்னும் தேன் என்னும் பொருள்பற்றிச் சிறந்த சொற்பொழிவொன்றாற்றினார்கள். திருவாசகம் சிறந்த பக்திநூல் அதை ஓதுகின்றவர்களுக்குப் பக்தி பெருகும் ஆன்மா பாசங்களினின்றும் நீங்கி, வீடுபேறடைவதற்கு அது பெருந்துணையாக இருக்கிறது. திருவண்டப் பகுதியிலுள்ள முற்பாகத்தில் அண்டங்களினுடைய தோற்றத்தைப் பற்றியும், அவற்றைப் படைத்துக் காத்து அழிக்கின்ற கடவுளுடைய பெருமையைப் பற்றியும், மணிவாசகப் பெருமான் கூறியிருக்கின்றார்.

"இன்னுழை கதிரின்
றுன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன்
றெரியின்"

உலகிலுள்ள அண்டங்களெல்லாம் மிகமிகப் பெரியன. நூறுகோடிக்கு மேற்பட்டன. ஒரு வீட்டின் கூரை வழியாகச் செல்லுகின்ற சூரிய கிரணங்களைப் பார்க்கும்போது, எண்ணிறந்த அணுக்கள் தோன்றி, மிகச் சிறிய தூசுகள் சுழலுவதைப் பார்க்கின்றோம், உலகின்கண் காணுகின்ற அண்டங்களின் பெருமையினை, கடவுளின் பெருமையுடன் நோக்கும்போது, அவைகள் மேலே சொல்லப்பட்ட அணுக்களைப் போல் ஆகின்றன. இவ்விதமாக மணிவாசகப் பெருமான் பௌதிக சாத்திர உண்மைகளைக் கூறியிருக்கின்றார் என்பதை நாங்கள் அறியலாம்.

## சைவத்தின் இருகண்கள்

("சைவத்தின் இருகண்கள்" என்னும் பொருளில் சைவமகாநாட்டில் ஸ்ரீமத் க. வச்சிரவேலு முதலியாரவர்கள் இரண்டாம் நாள் பிற்பகல் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்.)

சைவத்தின் அருள், அன்புக் கண்களாக முறையே சம்பந்தரும் அப்பரும் திகழ்கிறார்கள். சம்பந்தர் இயற்கை வர்ணனை செய்து அருள் நெறியைப் பாட, அப்பர் அன்புபூண்டவராய் 'உளவாரத் திருப்பணி செய்வோம், நீங்களும் வாருங்கள்" என்று அழைக்கின்றார் ஒருவன் தன்னைப் பாவி என்பதனுற்றான், ஏனைய மக்கள்மீதும், இறைவன்மீதும் அன்பு உண்டாகிறது. அருள் நெறி சம்பந்தருக்கே உரியது. அன்பு நெறி அப்பருக்கு உரியது. ஒன்றையொன்று பின்பற்றக் கூடியதும் அஃதே. இரு வரும் நெறியால் மாறுபட்டிருப்பினும், குறிக்கோள் ஒன்றே அதுதான் இறைவன் திருவடிகளை அடைதலாகும்.

## இலக்கிய விழா

சரவணை சேவா மன்றத்தின் ஆதரவில் 4-5-60இரவு ஷெவிழா சரவணை நாகேசுவரி வித்தியாசாலையில் நடைபெற்றது நியாயவாதி திரு, வே அ, கந்தையா தலைமைவகித்தார். திரு. அ. சண்முகரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினர், "திருக்குறளும் சைவசித்தாந்தமும்" என்ற தலைப்பில் 'சித்தாந்தச் செம்மல்' உயர் திரு. க. வச்சிரவேலு முதலியார் B A, L T (காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர்) அவர்களும், 'தமிழின்பம்' என்ற தலைப்பில் 'கலைமகள்' ஆசிரியர், ஸ்ரீமத் கி. வா. ஜகந்நாதன் M A. அவர்களும் சொற்பெருக்காற்றினர், ஆழ்ந்த கருத்துக்களை மிகத்தெளிவாக எடுத்துக்காட்டி சைவசித்தாந்தத்தின் உண்மைகளைத் திருக்குறளில் கண்டு எடுத்துரைத்த முதலியார் அவர்களின் சொற்பெருக்கு சபையோரின் கவனத்தை நன்கு இழுத்தது. கி. வா. ஜ. அவர்கள் சபையினரை தமிழ் இன்பத்தில் ஆழ்த்தினர்கள் திரு. சி. கணபதிப்பிள்ளை நன்றிகூறினர்.

## மந்திர நூலாயுள்ளது கந்தரனுபூதி

(அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் "கந்தரனுபூதி" என்னும் பொருளில் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்)

கந்தரனுபூதியை இயற்றியவர் அருணகிரிநாதர். கந்தரனுபூதிப் பாக்களை இன்ன இன்ன முறையாகப் பூசனைசெய்து பாராயணம் செய்பவர்கள் இன்ன இன்ன சித்திகளைப் பெறுவார்கள் என்பவைகளைக் கூறும் கந்தரனுபூதிப் புத்தகம் ஒன்றுண்டு. கந்தரனுபூதி மந்திர நூலாகவும் அமைகின்றது. கந்தரனுபூதியில் தாம் பெற்ற அனுபவத்தையும் முருகன் பெருமையையும் அருணகிரிநாதர் கூறுகின்றார். முருகனின் அனுபூதி நான், எனது என்பவைகள் அற்றவர்களுக்கே கிடைக்கும். அகந்தையை அகற்றும் ஆயுதம் பொறை. அவ்வாயுதத்தைக் கொண்டு அகந்தையை அகற்றி, கந்தரனுபூதி கந்தரலங்காரத்தைப் பாராயணம் செய்து கந்தபிரானின் அனுபூதியைப் பெறுவோமாக.

### சைவ சித்தாந்த உண்மையை விளக்கிய வாழ்க்கை

திருஞான சம்பந்தரின் வாழ்வு சைவசமயத்துக்குப் புதிய ஒளியைக் கொடுத்ததெனலாம் இவருடைய வாழ்வின் ஒவ்வொரு அம்சமும் சைவ சித்தாந்தத்தின் உண்மைகளைப் பிரதிபலித்ததோடு தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையாகவும் அமைந்துள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் "ஞானசம்பந்தர்" என்னும் பொருள்பற்றி ஸ்ரீமத். க. வச்சிரவேலு முதலியாரவர்கள் பேசும் போது மேற்கண்டவாறு கூறினர்.

## சிங்கப்பூரிற் சித்திரைச் சதுர்த்தித் திருவிழா

வெள்ளிக்கிழமை 29-4-60 மாலை 4-30 மணி தொடக்கம் சிங்கப்பூர் ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயத்தில் சித்திரை மாதச் சதுர்த்தி விழா விசேட அபிடேக ஆராதனைகளுடன் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றது. அன்று முத்தமிழ்மணி ஸ்ரீ சி எஸ் எஸ். மணிபாகவதர் அவர்கள் "பொல்லாப் பிள்ளையார்" என்னும் பொருளில் கேட்போர் பக்திபரசவமடையும் வகையில் கதாப்பிரசங்கம் செய்தார்கள். கதாப்பிரசங்கம் ஆரம்பிக்கு முன் திருவாளர் கலாநிதி தில்லைநாதன் அவர்கள் முத்தமிழ்மணி பாகவதர் அவர்களை வரவேற்று உபசரித்தனர். கதாப்பிரசங்கம் முடிந்ததும் விநாயகப் பெருமானுக்கு வசந்த மண்டபத்தில் விசேட தீபாராதனைகள் செய்யப்பெற்றுத் திருவிழா நடந்தது.

### அரசியற்கட்சிகள் இருபத்து நான்கு

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் இம்முறை இருபத்து நான்கு கட்சிகள் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளன. கட்சிகளின் தொகை கூடுகின்றதேயன்றிக் குறையவில்லை என்பதுபற்றிப் பலர் குறிப்பாகப் பேசிக்கொள்கின்றனர்.

### விட்டுக்கொடார்களாம் வெள்ளையர்கள்

தென்னாபிரிக்க இன ஒதுக்கற் கொள்கையைத் தாம் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று இலண்டனில் நடந்த பத்திரிகை நிருபர்மகாநாட்டில் தென்னாபிரிக்க வெளிநாட்டுக் கரும மந்திரி ஸ்ரீ எறிக் உலோவ் கூறியுள்ளார்.

நேயர்கள் நெஞ்சம்

## நல்லூரில் நடக்கிறது!

அகில இலங்கைச் சங்கீத வித்வ சபையினரால் யாழ். நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் வடக்கு வீதியில் நடாத்தப்பெறும் இசைவிழா சங்கீதப் பிரியர்களுக்குப் பெரும் விருந்தாக அமைந்துவிட்டது. இசைவிழா இவ்வளவு சிறப்பாக விளங்குவதற்கு ஆங்கு நிகழும் அத்தனை நிகழ்ச்சிகளுந் தான் காரணம் என்றால் மிகையாகாது. இசைவிழாவுக்கு நல்லூர் மிகமிகப் பொருத்தமான இடம் என்று களிப்புடன் கருத்துத் தெரிவிப்பார் ஒருபுறம்; இத்தனைநாள் எங்களை இசையின்பத்திலாழ்த்திய நல்விழா இன்னும் எத்தனை நாளைக்கு? என்றுரைப்பார் ஒரு புறம்; ஐயோ! இசைவிழாவுக்கென வந்தேனே!! எனது துவிசக்கரத்தின் 'டைனமோ பல்ப்' கள்வர் கவனத்தைப் பெற்றுவிட்டதே! 'பல்ப்' இல்லாமல் நான் எப்படி வீடுபோவேன் என்போர் மறுபுறம். இந்த விதமாகத் திருடர்கள் நல்லூரில் நடமாடுகிறார்கள். பெருமக்களே! அன்பர்களே! எச்சரிக்கை.

கா. இரகுநாதன்,
நாயன்மார்கட்டு, 5-5-60,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் மங்களமாய் மிளிர்வது சைவம்

## அகப்பொருளைச் சிறப்பாய்க் கொண்டது தமிழ்மொழி

**அகில இலங்கைச் சைவமகாநாட்டில் ஸ்ரீமத் கி. வா. ஜகந்நாதனவர்களின் தலைமையுரை**

இன்று இந்த மகாநாட்டிற்கு தலைமை தாங்கும்படி என்னைக் கேட்டுள்ளார்கள். "என் கடன் பணி செய்து கிடப்பது தன்கடன் அடியேனையும் தாங்குதல்' என்று கூறினார் அப்பர் சுவாமிகள். தாங்குதல் என்பது பெரிய பொறுப்பு. அதற்குச் சக்தி சபையிடம் இருந்துதான் நமக்கு வருகிறது. கல்லானது கோவிலிலே உருவம் பெற முன்பு எங்கேயோ இருக்கிறது. பின்பு மக்களின் ஆன்ம சத்தியினாலேயே அது இறையுருவம் பெறுகிறது

பாட்டிலும் வசனத்திலும் இங்கே வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டிருப்பதைக் காண மகிழ்ச்சியுறுகிறேன். "பாட்டியல் தமிழ் நடை பயின்ற வெல்லையுள்" எனக் கம்பரும் கூறியுள்ளார் இறைவனைப் பாட்டினாலே பாடியுள்ளார்கள். குழந்தைகளைத் தாய்மார் பாட்டினாலே தாலாட்டுவார்கள். தேவாரங்கள் சிறந்த இலக்கியங்களாக நம் முன் இருக்கின்றன,

சைவம் சிவத்துடன் சம்பந்தமுடையது. சிவம் என்பது அமைதி, மங்களம், ஏகம் என்ற மூன்று கருத்துக்களையுடையது. அமைதி என்ற கருத்து முதலிலேயிருத்தலை இக்காலத்திலே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இந்த இருபதாம் நூற்றாண்டிலே அரசியல் சாதி மதம் முதலியவற்றைக் கத்திபோட்டு வெட்டி மக்கள் மனதில் அமைதியை இல்லாமல் செய்துவிடுகின்றது சைவம் அருளோடு தொடர்புடையது. அறிவினாலே ஏற்படுவது. அருள் அறிவைப்பற்றி வள்ளுவர் "அறிவினான் ஆகுவதுண்டோ - பிறிதின் நோய் தன் நோய்போற் போற்றாக் கடை" என்று கூறியுள்ளார் அறிவு ஒரு கற்பக விருட்சம். அதன் கிளைகள் அஹிம்சை, கருணை, அருள் என்பன. கருணையிலே அருளுடன் சேர்ந்த கருணையே சிறந்தது பயனை எதிர்பாராத கருணை மிகவும் சிறந்தது. அது தெய்வ அருட்கருணை என்று கூறப்படும் இதையே தாயுமானவரும் "எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணியிரங்கவுநின் தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே" என்று கூறியுள்ளார். பொதுவாக தமிழ்நாட்டில் சைவம் என்றவுடன் தோணிக்கும் முதற் கருத்து புலாலுணவை நீக்கியவர் என்பதே. ஒரு மரத்திலே ஒரு இலையை ஒடித்துவிட்டால் எந்த விஞ்ஞானியாலும் அதை ஒட்டச்செய்ய முடியாது. அதுபோல ஒரு உயிரை ஆக்க முடியுமா?

சிலர் ஞானசம்பந்தருக்கு முன் சைவம் இருந்ததில்லை என்று எண்ணுகிறார்கள் அது பிழையான கருத்தாகும். ஞானசம்பந்தர் இறைவனுக்கு ஆக்கப்பட்ட கற்கோவில்களிலே சொற்கோவில்களைக் கட்டினார். தமிழரின் பண்டைய இலக்கிய நூல் தொல்காப்பியம். தமிழ் இலக்கணத்திற்குரிய தனிச்சிறப்பு அகப்பொருள் இலக்கணம் கூறப்பட்டிருத்தலே சொல் இலக்கணமும் எழுத்திலக்கணமும் எல்லாப் பாஷைகளிலும் உண்டு. ஆனால் பொருள் இலக்கணமோ தமிழுக்கே உரியது. அதிலே பூமியை ஐந்து வகையாகப் பிரித்திருக்கிறார்கள். அதனிலே உயர்ந்த குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வம் சிவகுமாரனாகிய முருகனே. இதனாலே சைவசமயம் மண்ணோடு ஒட்டிய சமயம் என்பது விளங்குகின்றது. நாற்கவிராசர் நம்பி அருகக்கடவுளை வணங்குபவர். அவர் தாம் வணங்கும் கடவுளை முதலாவதாகக் கூறியிருந்தால் நாம் அவரை என்ன செய்திருக்க முடியும். ஒருவர் மூன்றுவகையில் ஒரு வழியில் நிற்பர். பகை, நொதுமல்; நட்பு, இதில் நட்புடையோர் ஒருவரைப் புகழ்ந்து சொல்வதை ஏற்பது அவ்வளவு சரியல்ல. ஏனென்றால் அவர் நட்பினாலே அவரைச் சிறப்பித்துப் பேசக்கூடும் நொதுமலில் உள்ளவர்களும் தெரியாமல் கூறிவிடக்கூடும். ஆனால் பகைவர் கூறும்புகழ்ச்சி உண்மையானதாக விருக்கும். வீரமா முனிவர் பிறநாட்டிலிருந்து வந்து இங்கே கிறிஸ்த்தவத்தை வளர்க்கத் தமிழ்க்காவியம் பாடியவர் அப்பெரியாருமே தமிழ்நூல்களில் கூறப்பட்ட தெய்வ ஒழுக்கத்தை மாற்றியமைக்கவில்லை. உயர்ந்த மலையாகிய குறிஞ்சி நிலத்தில் முருகன் குடிகொண்டிருப்பதால் சைவம் உயர்ந்தது என்பது தானாகவே பெறப்படுகிறது. பிறசமயத்தவர் வந்து நம் கோவிலில் முன்னால் இருக்கும் நந்திதேவரைப் படம் பிடித்தாலும் நந்திதேவரின் உருவம் மாறுபடமாட்டாது. அவ்வாறே இளங்கோ பிடித்த படத்திலும் நம சமய நிலை மாறிவிடவில்லை. "நுதல்விழி நாட்டத் திறைவன் முதலாய்" என அவர் கூறுவதிலிருந்து நாம் இதை உணரலாம் நிகண்டு பாடியவரும் பிறசமயத்தவரே. அவர் பதினோராம் தொகுதியில் "பகவனே ஈசன் மாயோன் பங்கயன் ......புத்தன்" என்று சிவபெருமானை முதற்கண் பாடியுள்ளார்.

அமிர்தம் உண்டார் ஒரு காலமும் இறக்கமாட்டார். தேவாமிர்தம் அவ்வாறானதல்ல. உண்டவரை நெடுங்காலம் வைத்திருப்பது அவ்வளவுதான். உண்மையான அமுதம் சிவபெருமானின் அருள். அவர் நஞ்சுண்டும் இறவாமல் இருந்தார். "வினைஞோர் அமுதுண்டும் சாவ ஒருவருமுண்ணா நஞ்சுண்டு அருள் செய்குவாய்" என்பது தேவாரம்.

### வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவம்

—0—

வில்லூன்றி க்ஷேத்திரத்தில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் வேண்டுவார் வேண்டுவன ஈயும் ஸ்ரீ வீரகத்திப் பெருமானுக்கு, நிகழும் சார்வரிஞூ வைகாசிமீ 3ந்உ திங்கட்கிழமை ( 16-5-60 ) துவஜாரோகணமாகி உற்சவங்கள் நடைபெறவிருக்கின்றன வைகாசி 11ம் ம் 12ம் திகதிகளில் (24, 25 5-60) தேர் தீர்த்தோற்சவங்கள் நடைபெறும்.

### திருவாவடுதுறை ஆதீனத்தில் மகாபிஷேகம்

கொள்ளிடம். ஏப். 20

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21-வது பட்டம் குருமகா சந்நிதானம் தவப்பெருந்திரு சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆதீனத்தின் ஆத்மார்த்த பூஜாமூர்த்தியாகவுள்ள ஸ்ரீ நடராச மூர்த்திக்கு 19-4-60 காலை புத்தாண்டின் முதல் மகாபிஷேகத்தை (சித்திரை திருவோணம்) சிறந்த முறையில் செய்து வைத்து அலங்கார ஆராதனைகள் செய்து அருட் பிரசாதம் வழங்கினார்கள்,

மா. பாலசுப்பிரமணியன், "தினமணி" நிருபர்.

### தருமபுரம் ஆதீன விழாக்கள்

கொள்ளிடம். ஏப். 22

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனத்தின் 25-வது பட்டம் குருமகா சந்நிதானம் தவப்பெருந்திரு கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஞானபீடமேறிய சித்திரை சதய நக்ஷத்திர விழாவும், ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூசை விழாவும் 21 - 4 - 60 அன்று ஆதீனத்தில் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டன.

ஆதிகுருமூர்த்தியான தவப்பெருந்திரு. குருஞானசம்பந்தருக்கும், ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக அலங்காரங்களும் பஞ்சமுகார்ச்சனை, நவமுகார்ச்சனைகளும் நடைபெற்றன.

இரவு ஸ்ரீ. திருநாவுக்கரசு சுவாமிகளின் வீதியுலாக்காட்சியும் நடைபெற்றது.

(திரு. மா.பா, தினமணிநிருபர்)


இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கிறது!

**பலவிருத்திக் குளிகை**

இது ஆச்சரியமான குணம் உடையது

அசதி, பலவீனம், உடல்மெலிவு, நரம்புதளர்ச்சி, மறதி தாது பலவீனம் முதலியவைகளை நீக்கி புதிய இரத்தத்தை நரம்புகளுக்குள் புகுத்தி இழந்துபோன பலத்தையும் வலிமையையும் மீட்டிக் கொடுத்து வாழ்க்கையை வளம்பெறச் செய்விக்கிறது. 120 குளிகை புட்டி 1க்கு ரூ. 12-00,

**மூல வியாதிக்கு**

நாக பஸ்பம், கருணை லேகியம் சாப்பிடுங்கள்

ஆப்ரேஷன் அவசியமில்லை. முளை தானே கரைந்துவிடும்.

சிழ் மூலம், இரத்தமூலம், மலபந்தம், குத்தல் கடுப்பு முதலிய 9-வித மூல வியாதிகளும் குணமாகிறது.

பஸ்பமும், லேகியமும் 24 நாள் செட் விலை ரூ. 20-00

**மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S.I.**


# அறிவுக் கொலை செய்யற்க

## நிதி சேர்த்தற்காய் நீதியைக் கொல்வதா?

**குருபூசையில் பண்டிதமணியின் அறிவுரைகள்**

திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் பிரசங்கமும் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலை திருநாவுக்கரசு நாயனார் மண்டபத்தில் 21-4-60 வியாழக்கிழமை நடைபெற்றன.

அன்று பிற்பகல் சைவப் பிரசாரகர் ஸ்ரீமத் சி. சுப்பிரமணியதேசிகர் அவர்கள் தலைமையில் பிரசங்கம் ஆரம்பமாயது தலைவர் தனது ஆரம்பவுரையில் பிரசாரகர் பண்டிதமணி திரு. சி கணபதிப்பிள்ளை அவர்களின் சேவையைப் பாராட்டி பண்டிதமணிக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

"இங்குச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' என்பது ஆறுமுக நாவலருடைய இரண்டாம் பாலபாடத்தில் முதலாவது வசனமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதில் முத்தி என்னும் சொல் முக்கியமானது. முத்தி — விடுபடுதல். பாவங்களிலிருந்துவிடுபடுதல். பாதகங்கள் ஆறு வகைப்படும். அதில் முதலாவது மகாபாதகம். அறிவைக் கொல்லுதல் இதில் அடங்கும். அறிவு — நீதி.

இராவணன் திருக்கைலாசமலையை ஒரு முறை தூக்க முயற்சித்தான். அப்பொழுது சிவபெருமான் தனது பெருவிரலால் அழுத்த அதன்கீழ் இராவணன் அகப்பட்டுத் துன்பப்பட்டான். இராவணனின் அழுகைச் சத்தம் மலையின் ஒரு புறத்தில் இருந்து தவஞ் செய்துகொண்டிருந்த வாகீசருக்குக் கேட்டது. உடனே அவருக்கு இரக்கம் வந்துவிட்டது வாகீசர் இரக்கம் கொண்டதினால் அறிவை இழந்தார். அறிவைக்கொன்றார். இப்படிப் பிசகான முறையில் அறிவைக்கொன்றதினால் குற்றவாளியாகக் கருதப்பட்டுப் பூமியில் அவதாரம் எடுக்கவேண்டியவரானார். அவர்தான் திருநாவுக்கரசுநாயனாராக அவதரித்தார். இவருக்குத் திலகவதியாரும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் இரு ஆசிரியர்களாக அமர்ந்தனர். திலகவதியார் திருநீற்றின் மகிமையைக்காட்டினார். ஒருமுறை திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் வேதாரணியத்திற்கு

நஞ்சுண்ட கண்டத்தைப் பிராமணர்கள் வணங்குவார்கள். "நீலகண்டாய" என்னும் மந்திரத்தால் வழிபடுவார்கள். "அக்கறை மறை நவிலந்தணர் நுவலவும்படுமே" என்பது புறநானூறு. இராமாயணத்தைச் சரணாகதி காவியம் என்று சொல்வார்கள். வீபீடணன் சரணாகதியடைந்தபோது இராமர் அவனைச் சந்தேகியாமல் உடனே ஏற்றுக்கொண்டார் அப்போ வீபீடணன் கூற்றாகவைணவ அடியாராகிய, கம்பர் "தாழ்சடைக் கடவுள் உண்ட நஞ்செனக் கருதினேனே', என நயம்படக் காளகண்டத்தைப் பற்றிக் கூறியுள்ளார்.

நாம் நடமாடும் சாலைகள் உயர்ந்த மாணிக்கக்கற்களால் ஆக்கப்பெற்றவை, நாம் அவற்றின் அருமையை உணராமல் [illegible] இப்போ "யாதும் ஊரே யாவரும் கேளிர்" அடுத்த வரியை

யகற்ற என்னும் கொள்கையையே நாம் எங்கும் பார்க்கிறோம்,

ஆறுமுகநாவலர் பிறந்த இந்த நாட்டிலே சைவக் கொள்கைகள் பரவி இந்த மகாநாடு மிகப்பெரிய அளவிலே நடக்கவேண்டுமென நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அனுபவ ஞானிகளை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தந்தது இந்து மதம்

## ஆதி அந்தம் அற்று எவருக்கும் இல்லை என்னுது இடங்கொடுத்து நிற்பது

### கிளிநொச்சியில் ஸ்ரீ சுவாமி சத்தியானந்தா அவர்களின் பாராட்டுரைகள்

"யாழ்ப்பாணப் பகுதியில் அலைந்து திரிந்த நான் கிளிநொச்சிப்பகுதியில் எனது இலட்சியத்தைக் காண்கின்றேன். காந்திய தத்துவப் பணிகளும், சுதந்திர கூட்டு வாழ்க்கை முறைகளும் ஆத்மீகப் பணிகளும் இங்கு மூளை கொண்டிருப்பதைக் கண்டு பேரானந்த மடைகின்றேன். இத்தகைய இயக்கங்கள் மென்மேலும் வளர்ந்து இந்த நாட்டின் மூலைமுடக்குகளெல்லாம் பரந்து பரிமளிக்க வேண்டும் என ஆசைப்படுகின்றேன். இந்தப்பணிகளில் இளைஞர்களும் வாலிபர்களும் ஈடுபட்டு உழைப்பது என்னைத் திகைப்படையச் செய்கின்றது. எதிர்காலம்பற்றித் தன்னம்பிக்கை கொள்ளக் கூடிய வாய்ப்புகள் உண்டு. மக்கள் அலுப்புச் சலிப்பின்றி ஆதரவளிக்கவேண்டும்." என சுவாமி ஸ்ரீ சத்தியானந்தா கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் (திருநெறிநடைக் கழகத்தின் சார்பில்) நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்கள். கூட்டத்துக்கு மகாதேவ ஆசிரமத் தலைவர் ஸ்ரீமத் வடிவேல் சுவாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். கிளிநொச்சிப் பகுதி மக்களின் ஆன்ம விசாரத்துறைகள் அபிவிருத்தியடைய உறுதுணையாக ஸ்ரீமத் வடிவேல்சுவாமி அவர்கள் இங்கு வாழ்வது இப்பகுதியின் அதிஷ்டம். 'இந்து' என்றால் அஹிம்சா தத்துவத்தை உடையவன். அன்பை இலட்சியமாகக் கொண்டவன் என்பது கருத்தாகும். இந்துமத அனுஷ்டானத்துக்குப் பல தெய்வங்களின் பெயர்களும், உருவங்களும் உண்டு. இவற்றின் தத்துவம், உட்கருத்துக்கள் ஒன்றேயாகும். இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு மதத்தினருக்கும் உருவ வழிபாடு உண்டு. தெய்வங்களின் பெயர்கள் உண்டு. இதை யார்தான் மறுக்கமுடியும்.

இந்துமதம் சனாதன தர்மத்தை உடையது. ஆதியும் அந்தமும் இல்லாதது இந்து மதம் மிகமிக விசாலமானது பரந்த நோக்கம் உடையது. யாருக்கும் இல்லை என்னுது இடம் கொடுப்பது. எத்தகைய துன்பங்களையும் சகித்து வந்தவர்களையும் வளமாக்கும் வள்ளன்மை உடையது நமது சக்திகளுக்கப்பாற்பட்ட ஒரு தெய்வீக சக்தியைத் தலைமையாகக் கொண்டது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற தாரகமந்திரத்தைக்கொண்டது. மாபெரும் விஞ்ஞானிகளும் இந்த இருபதாம் நூற்றாண்டில் மனித சக்திக்கு அப்பாற்பட்ட மாபெரும் தெய்வீக சக்தி ஒன்று உண்டு என்பதை ஒத்துக்கொள்ளுகின்றார்கள். அத்தகைய பரம்பொருளை அடையும் வழியைக் கைக்கொள்வதுதான் மதம் — அல்லது தூய வாழ்க்கை.

சம்பந்தர், நாவுக்கரசர், ஆழ்வார்கள், சித்தர்கள், புத்தர், யேசு, முகம்மது போன்ற பெரும் மகான்களும் தூய வாழ்க்கைமுறைகளை அனுஷ்டித்து, சாதனை செய்து போதனைகள் செய்தார்கள், அந்த உபதேச நெறிகளை நாம் கைவிட்டு நமக்கேற்றபடி செய்து அவலப்பட்டு வாழ்கின்றோம்,

ஒவ்வொரு மதத்தினரும் உருவம் நாமம் இட்டுக் கடவுளை வணங்குகின்றார்கள். உருவம் நாமம் இல்லாமல் நாம் கடவுளைச் சிந்திக்க முடியாது, ஒவ்வொரு மதத்தினரும சமயச் சடங்குகள் செய்துகொண்டே இருக்கின்றார்கள். இதை மறுக்க முடியாது. உருவம் பெயர் இல்லாமல் கடவுளை வணங்கக் கூடியவர்கள் ஆத்ம ஞானிகளேயாகும். இந்துக்கள் டார்வின் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே முன்னேறி வளர்ந்திருந்தார்கள். இந்த உலகில் விஞ்ஞான ரீதியான ஒரு தத்துவம் இருக்குமானால் அது இந்து தத்துவமாகும். இதைப் பல விஞ்ஞானிகள் கூற நாம் கேட்கின்றோம்.

நமது நாடுதான் கடந்த 5000 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து ஆத்மீக அனுபவ ஞானிகளையுடையதாயுள்ளது, இவ்வளவு அனுமானிக்கக்கூடிய கால எல்லையில் வேறு எந்த நாட்டிலும் அனுபவ ஞானிகள் இருந்ததில்லை, இது ஒன்றே நமது பண்டைய ஆன்மீக தத்துவ ஞானத்தின் ஆழமான பழமைக்கு உதாரணமாகும். நமது மதம் அடிப்படையான உண்மைகளைக் கொண்டது. நமது பழைய தத்துவ ஞானக் கருத்துக்களை இந்தக்கால விஞ்ஞான யுகத்துக்கேற்றபடி புதுமெருகிட்டுக்கொள்ள வேண்டும். நாம் தூங்காமல் அதி தீவிரமாக முன்னேறிச் செல்ல வேண்டும.

தியானத்தின்மூலம் மனிதனுக்கு அபாரசக்தி உண்டாகின்றது. அந்தச் சக்திகளைக் கொண்டு அபார வேலைகளை - பணிகளைச் செய்யலாம். தூய வாழ்வு பிறருக்காக வாழ்தலேயாகும். தியானம் - அடக்கம் - அன்பு இவை நமது செல்வங்கள், பழைய சம்பிரதாயங்களில் வேண்டத்தகாதவற்றை நீக்கிப் புதிய சம்பிரதாயங்களை ஏற்படுத்திக் காலத்துக்கேற்ற மாற்றங்களை நாம் செய்து கொள்ளலாம்' ஆனல் அடிப்படைத் தத்துவம் மாறக்கூடாது ஏழைகளுக்கு - ஆதரவற்றவர்களுக்கு உதவுவதுதான் தெய்வத் தொண்டுகளாகும். இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் கொடுக்கவேண்டும். இதுதான் இந்து தர்மம்.

---


# தொழில் நுட்பக்கல்லூரி

(SCHOOL OF TECHNOLOGY)

யந்திர கைத்தொழிற் சமாசத்தாரால் அமைக்கப்பெற்றது.

Established by
The Engineering & Industrial Company Limited.

1960ம் ஆண்டு ஜனவரி 18ந் திகதி தொடக்கம் 52 வாரங்களுள்ள 4 கல்வித் தவணைகளில் பின்வரும் துறைகளில் கல்வி கற்பிக்கப்படும்.

(அ) மின்சார யந்திர வேலை (இலண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் பரீட்சை). இங்கிலாந்து மின்சார யந்திர நிபுணர்கழகத்தார் நடத்தும் முதற்பகுதிப் பரீட்சைக்கு ஏற்றதாக இக் கல்லூரி வகுப்பைக் கணிக்கச் செய்தற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

(ஆ) வானெலிக் கருவி வேலை (சிற்றி அன்ட் கில்ட்ஸ் பரீட்சை)

(இ) அளத்தல் மட்டப்படுத்துதல் (அளப்புப் பகுதித் தலைவர் அதிகாரச் சீட்டு வழங்கும் பரீட்சை)

(ஈ) படம் வரைவோர் பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு, அளப்புப் பகுதித் தலைவரின் உத்தரவுபெற்ற படம் வரைவோர் அதிகாரப் பரீட்சை.

(உ) பி. எஸ். சி, (Econ.) முதல் வருடம் ஜி, சி. ஈ. உயர்தர வகுப்பு இகொனமிக்ஸ் (பொருளாதாரம்) 3 கல்வித் தவணைகள் (இலண்டன் சர்வகலாசாலைப் பரீட்சை)

எஸ். எஸ். சி. அல்லது அதை ஒத்த வகுப்பிற் படித்த மாணவரின் விண்ணப்பங்களே ஆலோசனைக்கு அங்கீகரிக்கப்படும்.

விடுதி ஒழுங்கு இருக்கின்றது.

பத்திரங்கள், விளக்கப் புத்தகங்கள் பிறவிபரங்கள் என்னிடமிருந்து பெறலாம்

த. சிற்றடல்
சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.

விக்ரர் ஜே. இராசையா
தலைமை ஆசிரியர்,


---


### அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

தி. க. சிதம்பரப்பிள்ளை அவர்களுடைய சாவகச்சேரி கண்டி றோட் 383-ம் நம்பர் அடைவு கடையில் 1956 ஞூ தை மீ 1-ம் தேதி தொடக்கம் 1958 மார்கழி 31-ம் தேதி வரையும் அடைவு வைக்கப்பட்டு மீளாத தவணைதப்பிய நகைகள் 1960 வைகாசி மாதம் 28-ம் தேதி காலை 10மணி தொடக்கம் குறித்த கடையில் என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மு. நா. மார்க்கண்டு,
ஏல விற்பனையாளர்.
M 13 29—4—60.


### சிதம்பரம் ஸ்ரீ ஆனந்தநடராசமூர்த்திக்கு திருவோண மகாபிஷேகம்

கொள்ளிடம். ஏப். 20 சிதம்பரத்திலுள்ள ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ ஆனந்தநடராசமூர்த்திக்கு, புத்தாண்டின் முதல் சித்திரை மாத திருவோண மகாபிஷேகம் 19-4-60 மாலை சிறந்த முறையில் நடைபெற்றது.

பல பாகங்களிலிருந்து மக்கள் வந்து கூடித் தரிசனம் செய்தனர்.

---

## அறிவுக் கொலை ... ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்தருளினர். அங்கே வேதங்களால் காப்பிட்டு அடைக்கப்பட்ட திருக்கதவைத் திருநாவுக்கரசர் திறக்க சம்பந்தர் பூட்டினுர்.

இவ்விதமாக யாத்திரை செய்து வரும் நாளில் நாவுக்கரசர் திருக்கைலைக்குப் புறப்பட்டார். அவர் மிகவும் கஷ்டப்பட்டுச் செல்லும்போது சிவபெருமான் திருப்பஞ்ஞீலியில் திருக்கைலையைக் காட்டியருளினுர்.

அறிவைக் கொல்லக்கூடாதென்றும் (அறிவு - நீதி) நீதியைக் கொன்று நிதி சேர்க்கக்கூடாதென்றும் இத் தொடர்பிற் பிரசாரகர் வற்புறுத்தினுர்.

---


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.


கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்

Std 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனால் அருளப்பெற்றவை ஆகமங்கள்

## வேதத்துக்குப் பாடியமாய் அவை விளங்குகின்றன

[பிரம்மஸ்ரீ. கு. பாலசுந்தரக்குருக்களவர்கள் "ஆகமங்கள் அறிவு நூல்கள்" என்னும் பொருள்பற்றி அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

"ஆகமம்" என்பதற்குத் தொன்றுதொட்டு வரும் அறிவு என்பது பொருள். வேதங்களைப்போலவே ஆகமங்களும் அறிவு நூல்கள் ஆம். 'ஆகம'த்தின் பொருளைப் பின்வரும் சுலோகத்தினால் அறியலாம்

ஆகதம் சிவ வக்த்ரேப் யோ
கதஞ்ச கிரிஜா சுருதௌ!
மதஞ்ச வாஸு தேவஸ்ய
தஸ்மாத் ஆகமமுச்யதே!!

இதன் பொருளாவது அநாதி முத்த சித்துருவாகிய சிவபிரான் வாயிலிருந்து தோற்றியது; மலையரசன் மகள் கேட்க அவளுக்குச் செவிப் புலனாயது; திருமாலுக்கும் இதுவே கருத்தாவது ஆகையினால் ஆகமம் என்னும் பெயர்பெற்றது எனச் சான்றோர் கூறியுள்ளனர்;

வேதங்களின் தோற்றம், காலம் என்பனவற்றைப் போலவே ஆகமங்களின் தோற்றம் தொன்மை என்பனபற்றியும் இக்கால மொழியாராய்ச்சியாளரிடையே அபிப்பிராய பேதம் உண்டு இத்தகைய நூல்களை ஆராய்ச்சியாளர் எங்ஙனம் நோக்கினும் சமய நம்பிக்கையுடையோர் அவற்றை இறைவன் திருவாக்கென்றே நம்புவர். இறைவனருள் பெற்ற சிவஞானிகள் வாக்குக்களும் இறைவன் வாக்குக்களாமாறே பாராட்டப்படுதலான், அங்ஙனம் கொள்ளினும் இழுக்கில்லையாம்.

சைவ அன்பர்கள் இவற்றை எங்ஙனம் கொள்கின்றார்கள் என்பதை நோக்குவாம்.

"அருமறை யாகம முதனூ
லனைத்துமுரைக்கையினால்
அளப்பரிதா மப்பொருளை
அரனருளால் அணுக்கள்
தருவர்கள் பின் தனித்தனியே
தாமறிந்த வளவிற்
தர்க்கமொடுத்தரங்களினாற்
சமயம் சாதித்து
மிருதி புராணங் கலைகண்
மற்றுமெல்லா
மெய்ந்நூலின் வழிபுடையா
மங்கம் வேதாங்கம்
சுருதி சிவாகமம் ஒழியச்
சொல்லுவதொன்றில்லை
சொல்லுவார் தமக்கு
அறையோ சொல்லொணாதே"

என்னும் சிவஞான சித்திச் செய்யுளானே 'நூல்' எனப்படுவனவெல்லாம ஒருநிகரனவாதலின்றி முதனூல், வழிநூல் சார்பு நூல், பூர்வபக்க நூல் எனப் பல்வேறு வகைப்பட்டு, மேன்மேல் நூல்களை நோக்கக் கீழ்க்கீழ் நூல்கள் மென்மையுடையனவாய். அவற்றுள், ஏனைச் சமய நூல்கள் எல்லாம் முதனூலாகிய வேதாகமப் பொருளை முழுவதும் உள்ளவாறுணரமாட்டாதார் அவற்றுட் சில பொருளைச் சமுத்திர கலசநயம்பற்றி ஆண்டாண்டெடுத்துக்கொண்டு தத்தம் அறிவளவுக்கேற்பத் தொகுத்தும் விரித்தும் செய்த நூலாகலான் அவையெல்லாம் பூர்வ பக்க நூல் எனப்படும். ஸ்மிருதி, புராணம், கலைகள் முதலியன சமய நூலல்லாதன 'மற்றும்' என்பதனாற் றழுவப்படும். உபாகமம் முதலாயினவெல்லாம் அவ் வேதாகமப் பொருளை உள்ளவாறு உணர்ந்தோர் அவற்றைப் பிறர்க்கு விளங்கப் படுத்துதற்கு நால்வகை யாப்பினுள் ஒன்றான வழிப்படுத்துச் செய்த நூலாகலான் அவை வழிநூல் எனப்படும், ஏனைக் காருடம் தககிணம் முதலிய ஆகமாங்கங்களும், சிக்ஷை, கற்ப சூத்திரம முதலிய வேதாங்கங்களும், முறையே அவ்விரண்டனையுமுள்ளவாறு உணர்தற்குச் சார்பாய்ப் புடைபட்டு நிகழ்தலின் அவை சார்பு நூல் எனப்படும். இவ்வாறன்றி வேதாகமங்களி னடங்காத பொருளாய் ஒன்றனையெடுத்துக்கொண்டு சுதந்தரமாய்ச் செய்யு நூல் ஒன்றுமில்லை. உண்டென்று சொல்லிப் பிணங்கும் பேதைகள் என்கடவார்.

இச்செய்யுள் சமய நூல்கள் யாவும் அருமறையாகமத்தே காணப்பட்டடங்கும் என்பதனை விளக்குகின்றது.

'வேதநூல் சைவநூல்
என்றிரண்டே நூல்கள்
வேறுரைககு நூல் இவற்றின்
விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதியமலன்
தருநூ லிரண்டும்
ஆரண நூல் பொது;
சைவமருஞ்சிறப்பு நூலாம்;
நீதியினால் உலகர்க்கும்
சத்தினிபாதர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையின
ஒழிபொருள் வேதாந்தத்
தீதில் பொருள்கொண்டுரைக்கு
நூல் சைவம்; பிறநூல்
திகழ்பூர்வம், சிவாகமங்கள்
சித்தாந்தமாகும்"

முன்னர்ச்செய்யுளிலே பெறப்பட்டவாறு வேதம், சிவாகமம் இரண்டும் ஏனையோராற் செய்யப்படும் வழிநூல் சார்பு நூல், பூர்வபக்க நூல்களிலொன்றாக வைத்தெண்ணுதற்கு ஒருவாற்றானுமியைபின்றி, அவையனைத்திற்கும முதனூலாகி, அநாதி முத்தனாகிய இறைவனாற் றரப்படு நூலாக, ஏனையவெல்லாம இவையிரண்டினின்றும் விரிந்த நூல்களாகலின் இவ்விருவகை நூலுமே நூலென்றுயர்த்துக்கூறப்படுவனவாம். அற்றேல், முதல்வனாற் றரப்படும முதனூலை ஒன்றாக வைத்தெண்ணாமல் இங்ஙனம் இருவகைப் படுத்தெண்ணியது என்னையெனின், முதல்வன் பெருங்கருணையாளனாகலின், உலகத்தாருய்தற்பொருட்டும், சத்திநிபாதமுடையாருய்தற்பொருட்டும், திருவுளத்திற்கருதி, பொருள் பலபடத் தோன்றும் சூத்திரமும் அதனையவ்வாறு ...டாது தெளிதது... பாடியமும்போல, முறையே வேதமும் சிவாகமும் செய்யப்பட்டனவாகலான் அவையிரண்டும முறையே 'பொது நூல்' "சிறப்பு நூல்" எனப்பட்டுச் சூத்திரமும் பாடியமும்போல வேறுவைத்தெண்ணப்பட்டன. இங்ஙனம் வேதத்திற் கூறுங் கருமகாண்ட... பொருள்...கு இன்... ...டெஞ்சி நின்றனவாய்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## சைவத்தின் பழைமையும் பெருமையும்

### புதை பொருள்களிற் காணவரும் பல சான்றுகள்

உலகம் பழைமையானது போல சைவமும் பழைமையானது. அதனை இந்தியாவிலே கண்டுபிடிக்கப்பட்ட மொகஞ்சதாரோ ஹரப்பா நாகரிகங்களுக் கறிகுறியான புதை பொருள்கள் காட்டுகின்றன. விளக்கு என்று சொல்லும்போது சுடர், அதன் கதிர்கள் ஆகியவைகளைக் குறிக்கின்றன. வேதங்களில் இந்திரன், வருணன், வாயு அக்கினி முதலியவைகளின் வழிபாடு உண்டென்றால் அவ்வாறன்று. விளக்கின் சுடரிலிருந்து கதிர்கள் பரவுவதைப்போல் சிவனாகிய சுடரிலிருந்து, இந்திரன், வருணன் முதலாகிய கதிர்கள் பரவுகின்றன. ஆகவே வேதங்களில் இயற்கைகளைத் தெய்வமாக வழிபட்டார்களெனின் சிவனையே தெய்வமாக வழிபட்டார்களென்றே கொள்ளவேண்டும். "ஏகம் சத் விப்ரா பவந்தி" என்ற வேத வாக்கியமும் இதனைவற்புறுத்துகின்றது. ஏகம் ஒருவன் என்ற பொருளையும், சத் உள்ளது என்ற பொருளையும் தங்கு இரு சொற்களும் சிவனைக் குறிக்கின்றன. 'ஒருவன் என்று ஏத்த நின்ற" 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்கிற அடியார் வாக்குகள், "ஒரு வளி வண்ணன் என்பர்" என்கிற நம்மாழ்வார் மொழி ஆகியவைகள ஒருவன் என்ற சொல்லால் முறையே, சிவனையும் கண்ணனையும் குறிக்கின்றன.

அகில இலங்கைச் சைவ மகாநாட்டின் இரண்டாம் நாள் பிற்பகல் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசும்போது பச்சையப்பாக் கல்லூரித் தலைமை ஆசிரியர் ஸ்ரீமத். க. வச்சிரவேலு முதலியாரவர்கள் மேற்கண்டவாறு கூறினார்கள்.

---

### சைவமகாநாட்டால்

1-ம் பக்கத் தொடர்ச்சி

நுணுக்கமாகவும் கற்றுணர்ந்தவர்கள் தங்கள் விலைமதித்தற்கரிய கருத்துக்களைச் சைவ மகாநாடுகளில் தாங்கள் நிகழ்த்தும் பிரசங்கங்கள் மூலம் தெரிவிக்கும்பொழுது அவர்கள் அக்கருத்துக்களை இலகுவாக அறியவும் அவற்றின்படி யொழுகவும இத்தகைய சைவ மகாநாடுகள் பெருந் துணையாகவிருக்கும். இக்காலத்தில் மக்கள் பலரிடையே அவர்கள் கற்கும் கல்வியறிவு வேறாகவும் அவர்களுடைய ஒழுக்கம் வேறாகவும இருக்கின்றன. மக்களை அவர்கள் கற்றபடி ஒழுகச் செய்வதற்கும் இத்தகைய சைவ மகாநாடுகள் பெருந் துணையாகவிருக்கும்.

—வளரும்.

### நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நலந் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரீமத் கி. வா. ஜகந்நாதனவர்கள், ஸ்ரீமத் க. வச்சிரவேலு முதலியாரவர்கள், ஸ்ரீமதி இரத்தினம் நவரத்தினமவர்கள் திரு த. முத்துச்சாமிப்பிள்ளை யவர்கள் தலைமை வகித்து மாநாட்டை நடத்தினர். பொருள் செறிந்த அறிவுரைகளைத் தங்கள் சொற்பொழிவுகளின் மூலம் அறிஞர்கள் வாரி வழங்கினர்:

கீரிமலைப் புனிததலம் பற்றியும் சைவபரிபாலன சபை நாவலர் மண்டபத்தில் நூல் நிலைய மொன்று அமைப்பது பற்றியும் இரு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன தேவாரப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இவ்வாறு பல துறைகளிற் சிறந்து மூன்றுநாள் நிகழ்ச்சிகளும் நன்கு நிறைவுற்றன.

---

### தமிழ்த் தட்டெழுத்துச் சுருக்கெழுத்தாளர் தேவையில்லையாம்!

அரசாங்க ஆதரவில் நடந்து வரும தமிழ்த் தட்டெழுத்துச் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புக்களை இனி நடத்த வேண்டிய தேவை இல்லையென்றும் குறித்த வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்களைப் பிறபதவிகளுக்கு மாற்றலாமென றும் அரசகருமமொழிப் பகுதியார் அரசாங்க நிதிப் பகுதியாருக்கு அறிவித்துள்ளனரென அறியவருகின்றது.

---

## உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 8-5-60—14-5-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தேகசுகம் இவ்வாரத்தின் பின் திருந்தும். நெருக்கடி குறையும். வியாபார உத்தியோக கருமங்களுக்கு முன் அரை வாரம் நல்லாயிருக்கும். புதன் பிற்பகல் வியாழம் வெள்ளி கவனமாய்க்கழிக்க வேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

இனத்தவர்களுடன் இந்தவாரம் சண்டைகளுக்கிடமுண்டு. உமது மனம் அமைதியா யிருக்கமாட்டாது. செலவதிகரிக்கும். வெள்ளி பிற்பகல் சனி கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

பணத்துறையில் நல்ல வாரம். உத்தியோக சித்திக்கும் பகைவர் அழிவுக்கும் இடமுண்டு. பிதா வழி இனத்தவர் தொந்தரவாயிருப்பார்கள். தேகசுகம்பற்றிக் கவனமாயிருக்கவும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

திரும்பவும் நல்லவாரம். வேலை மிகுதியாயிருக்கும். ஆனால் உம்முடைய முயற்சிகளில் நீர் சித்தியடையக்கூடியதாயிருக்கும். வார இறுதியில் இனத்தவர்களுடன் சண்டைகளுண்டாகலாம்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

சுகவீனங்களுக்கிடமுண்டு. சிறு அபாயங்களுக்கும் இடமுண்டு புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். பிதாவழி இனத்தவர் அதிக உதவியாயிருப்பார்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

தனலாபங்கள் நிச்சயம் ஆனால் மனச்சமாதானமிருக்கமாட்டாது. குடும்பக குழப்பங்களுக்கும் இடமுண்டு. நீர் சித்தியடைதற்கு ...

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

விவசாய முயற்சிகள் மூலம் இந்த வாரம் இலாபங்கள் நிச்சயம். வியாபாரக்கருமங்களில் எல்லா எதிர்ப்பையும் நீர் நீங்கக் கூடியதாயிருக்கும். ஆனால் குடும்பக்கருமங்கள் குழப்பமாயிருக்கும்,

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

இந்த வாரம் அளவுகடந்த வேலைகள் சுமத்தப்படுவீர். இரகசியப் பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். பெண்ணின நண்பர் தொந்தரவாயிருக்ககூடும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இந்த வாரம் தொடக்கம் சிறிது மனச்சமாதானமுண்டாககூடும். பகைவர் அழிவும் பிள்ளைகள்மூலம் மகிழ்ச்சியும் நிச்சயம். ஆனால் வேலை கூடுதலாயிருக்கும்,

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

இந்த வாரம் செலவதிகமாயிருக்கும். சிறு சுகவீனங்களுக்கும் இடமுண்டு. இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர் உதவுவர். சிறிது காலத்துக்கு எதுவொன்றையும் புதிதாய்த்தொடங்க வேண்டாம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

இந்த வாரம் சுகவீனங்களுண்டாககூடும். ஞாயிறு திங்கள் கவனமாய்க் கழிக்கவேண்டும். வார மிகுதி புதுககருமங்களுக்கு நன்றாகும் நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

தனலாபங்கள் இந்த வாரம் நிச்சயம். இனத்தவர்கள் அதிக உதவியாயிருப்பர், பகைவர் அழிவும் போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம். ஆனால் திங்கள் இரவு செவ்வாய் புதன் ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அப்பர் அருள்மொழியின் உண்மைப் பொருள்

## மக்கள் வாழ்க்கை நிலைமையை வெளிப்படுத்தும் சிறப்பு

சமண சமயம் தழைத்தோங்கிய காலம் கி. பி. ஏழாம் நூற்றுண்டு. சமண மன்னன் பல இடங்களில் சமணப் பள்ளிகளையும், கோயில்களையும் கட்டினுன். சமணப் பிரசாரகர்கள் பலர் இருந்தனர். அவ்வித காலத்தில்மருணீக்கியாரின் அறிவை அம்மதம் கவர்ந்தது. தம் அறிவுத் திறத்தால் அவர்களுக்குள் ஆசாரிய புருஷனக விளங்கினுர் மருணீக்கியார். ஆனுலும் அவர் உள்ளத்தில் வாசனைப் பழக்கத்தினுல் தமது பரம்பரைக்குரிய சைவ நெறியின் நினைவுகள் படிந்திருந்தன. அறிவு சமணத்தில் செலுத்தவும் உள்ளம் சைவத்தை நினைக்கவும், அவர் சமணராகவோ, அன்றி சைவராகவோ இல்லாது வாழ்ந்தாரெனலாம். அவருக்குச் சூலை நோய் வந்தது. அப்போது தான் மருணீக்கியார் உண்மை நெறி சிவநெறி என்பதை அறிந்தார். மெய் கழுவுவானும் தாகமுடையானும் அவை போன்ற பிற தேவையுடையோரும் நீர் பெறுதற்குப் பொறுத்திருக்கலாம்; ஆனுல் தலையில் தீ பற்றிய ஒருவனுக்கு நீர் உடனேயே தேவைப்படும். எவன் மரணம் வந்துவிட்டதைக் கண்டு அஞ்சுகிருனே அப்போதே அவன் உண்மையான மனிதன் என்பதை அறியலாம். தீ பற்றி எரிகிறவன் நீரைத் தேடுவதுபோல மரணப் பயமுடையவன் சிவனை நினைக்கிருன். அதுபோலவே, சூலை நோய் அவரை வருத்தியபோது உண்மையான நெறி சிவநெறி என்பதனை அறிந்தார். தமக்கையாரிடம் வந்து, திருவீரட்டானேசுவரர் சந்நிதியையடைந்து பாட்டுப்பாட எவராலும் முடியாத நிலையிலும், சிவன் திருவருளால் "கூற்றுயினவாறு" என்ற தேவாரத்தைப் பாடுகிருர். அந்தப் பதிகம் முழுவதிலும் தான் பெற்ற அனுபவத்தைக் கூறுகின்றுர். "கூற்றுயினவாறு" "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் ... ... ..." "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்" எனவரும் தேவாரங்கள் முறையே சூலை நோயால் தான்பட்ட பாட்டையும், சமணத்தை அனுட்டித்தாலும் சிவனை நினைத்தமையையும், சிவனைச் சலம் ஆகியவை கொண்டு வழிபடுவதை மறவாத தன்மையையும் குறிக்கின்றன.

அடியார்களின் அருள்மொழிகளைக் கொண்டு அவர்கள் வரலாற்றை அறியமுடியாது. மக்களுடைய அனுபவ நிலையினின்று அவர்கள் பதிகங்கள் பாடுவார்கள். உதாரணமாக "மனைவி" என்ற கருத்துப்பட அருட்பாக்கள் பாடியுள்ளார்கள். அவை ஆன்மாக்களின் அனுபவ நிலையில் நின்று பொதுப்புடையாகப் பாடியவை இவற்றைக்கொண்டு அப்பர் விவாகஞ் செய்தவர் என்று பகுத்தறிவாளர் கூறுவர். ஆனுல் காரைக்காலம்மையார் திருவிரட்டை மணிமாலையில் இதே கருத்துப்படப் பாடியிருக்கிருர். இதற்குப் பகுத்தறிவாளர் யாது காரணம் கூறுவர்? எங்கள்பொருட்டு அரியகருத்துக்கள்செறிந்த அருட்பாக்களை அப்பர் சுவாமிகள் பாடியருளினுர். அவருடைய அனுபவங்கள் நாங்கள் விளங்கக்கூடியவையாயிருக்கின்றன. அவை எம அனுபவங்களுக்கு அணிமையிலுள்ளன. ஆகையினுலே தான் அப்பர்சுவாமிகளின் திருத்தாண்டகங்கள் எமக்குப் பெரும் இன்பந்தருகின்றன. அவற்றை நாம் படித்துப் பயனடைதல் வேண்டும்.

அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் "அப்பர் அருள்மொழி" என்னும் பொருள்பற்றிப் பேசும்போது ஸ்ரீமத்.கி வா. ஜகந்நாதனவர்கள் மேற்கண்டவாறு கூறினுர்கள்.

---

### உமாபதிசிவாசாரியர் குருபூசை

இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்
நாள்: சார்வரிஹூ சித்திரைமீ உகூ உ (8-5-60) ஞாயிற்றுக்கிழமை

நிகழ்ச்சிகள்:

பி, ப. 6½—7 கடவுளாராதனை
,, 7—7½ தமிழ்மறையோதல்
,, 7½—8½ "உமாபதிசிவாசாரியர்" என்னும் பொருள்பற்றிப் பிரசங்கம்,
பண்டிதர் பிரமஸ்ரீ. வ. மு. இரத்தினேஸ்வரஐயர் அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் அழைக்கப்படுகின்றனர்

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
4-5-60.

---

### வாக்காளருக்கு அடையாளச்சீட்டு

வாக்காளருக்கு அடையாளச்சீட்டுகள் வழங்க வேண்டுமென்றும், அபேட்சகர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் வீடுவீடாகச் சென்று ஆதரவு தேடக்கூடாதென்றும் பாராளுமன்ற உள்நாட்டு ஆட்சிமன்றத் தேர்தற்

---

### உ வியாவில் சைவ நன்மக்கள் மகாநாடு

சைவ நன்மக்கள் பிரதானமாகச் சைவ இளைஞர்கள் சைவசமய சாத்திரங்களைக் கற்றுச் சமய ஒழுக்கம் நிரம்பியவர்களாய் வாழுதற்கு உதவும் பொருட்டு 12-5-60 வியாழக்கிழமை இரவு 6-30 மணிக்கு வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலை திருநாவுக்கரசு நாயனுர் மண்டபத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

அத்தருணம் சைவப்பெரியார் ஸ்ரீமான் மு ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமைவகித்து வேண்டியவகையில் துணைபுரிவார்கள்.

இவ்வுயரிய நோக்கத்தில் அனுதாபமுள்ள அன்பர்கள் யாவரையுஞ் சமூகமளித்து ஆலோசனை கூறி உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
இ. நாகலிங்கம்

காரைநகர், 1-5-60.

M 19 6-5-60.

---

## ஆறறிவார் எங்கள்

(முதற்பக்கத் தொடர்ச்சி)

கூற இயலாது. திருமந்திரத்திற்கு முழு உரை கண்டார் ஒருவருமில்லை. பசுக்களில் கொண்ட கருணையினுலே இடையன் உடலிற் புகுந்த திருமூலர் மக்கள் மேலுள்ள கருணையினுலே திருமந்திரத்தைப் பாடினுர், தான்பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறப்பாடினுர். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பதுபோல ஒரு சில உதாரணங்களைப்பார்ப்போம்.

நமது உடல் நிலையற்றது; இதை ஒரு தடாகம்போல நமக்குச் சொல்கிருர். ஒரு செல்வர், நல்ல உத்தியோகம்; உணவில உள்ள அறுசுவையின் பெருமைகளை நன்கு உணர்ந்தவர். தானே காய் கறி முதலியன வேண்டித் தன மனையாளிடம் கொடுப்பார். தன்னுடைய நாயகன் விரும்பியபடி அறுசுவையையும் சமைத்து, தாமே கூட இருந்து ஊட்டுதலே நல் மனைவியின் பண்பு; அவ்வாறே மனையாள் ஊட்ட அவர் உண்டார், மிக நல்லாய் இருக்கிறது என்று கூறினுர்; சற்று களைப்பாயிருக்கிறது, சற்று தூங்குவோம் என்று படுத்தார். ஆனுல் நடைமுறை மாறிவிட்டது. அவர் வழமைபோல எழும்பவில்லை. இதைத் திருமூலர் அழகுபெறக் கூறுகிருர்.

"அடப்பண்ணி வைத்தார்
அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு
மந்தணம் கொண்டார்
இடப்பக்கமேஇறை
நொந்தது என்றுர்
கிடக்கப் படுத்தார்
கிடந்தொழிந்தாரே"

உடல் நிலையாதெனில் நிலையுள்ளது எது? இறைவன். இறைவனையடைய அன்பு வேண்டும். இறைவனைக் கண்டவுடன் கைகுவிய விபூதி பூசும்போது அண்ணுர்ந்து நின்று பூச உள்ளத்தில் நெகிழ்ச்சி வேண்டும். கோபம் கொண்டிருக்கும் ஒருவரைப் பார்த்தவுடனே அவரின் மெய்ப்பாடுகள் அவரின் கோபததைத் தெரிவித்துவிடுகின்றன மெய்ப்பாட்டை வடமொழியில் "பாவம்" என்பர். அன்பினுலே மெய்ப்பாடு தானுக நிகழும் நிலையை "தொழுதகை தலைமேலேற" எனச் சேக்கிழார் காட்டுகிருர். பக்தி என்பது அறிவல்ல, பத்தி சாதனம் ஞானம சாத்தியம் என்று சொல்லுகிருர்கள் அவை தவருன கருத்துக்களாகும், எந்தப் பெருமானுடைய பெயரை நினைந்து நாம் உருகுகின்றேமோ அந்தப் பெருமானே அன்பாகவும் இருக்கிருர் "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்பது திருமூலர் வாக்கு இதனுலே சாதனமும் சாத்தியமும் ஒன்றேதான் என்பதை விளக்குகிருர்

நாம் பார்க்கும் தரை சிவபெருமானுடைய சத்தி. ஆகாயத்தைப் பார்த்தால் நாலுபக்கமும் கவிந்து தோன்றுவது அது சிவம் ஆகும். சிவமும் சத்தியும் சேர்ந்தது தான் சிவலிங்கம் ஸ்நானம் செய்யும் இடம் கடல். கடலிலிருந்து நீரை முகில்களாகிய குடங்களால் அள்ளி ஊற்றுகிருர்கள். மேலே இருக்கும் நட்சத்திரங்கள் மலர்மாலைகளாகக் காட்சியளிக்கின்றன.

"தனியுற்ற சத்தி
தனிலிங்கம் விண்ணுமை
திரைபொரு நீரது
மஞ்சன சாலை
வரைதவழ் மஞ்சுநீர்
வானுடு மாலை."

என்று திருமூலர் பாடினுர். சித்தரின் வாக்கிலேகுறிப்பான சொற்கள் தோன்றும்; எங்களில் ஐந்து புலன்களிருந்து தொல்லை கொடுக்கின்றன. 'ஓரவொட்டார் ஒன்றை உணரவொட்டார்" என்று பாடுகிருர் அருணகிரியார், ஆனுல் இறைவனுகிய மேய்ப்பான் அருளைப்பெற்ருல் பசுகரணங்களெல்லாம பதி கரணங்களாக மாறிவிடும். ஐம்புலன்களையும் பசுக்களுக்கு ஒப்பிடும் திருமூலர் இறைவன் அருள் கிடைத்தால் "பசுக்களைந்தும் பாலாய்ச சொரியுமே" என்று கூறுகிருர். இந்தத் தன்மையையே பெரிய புராணம்,

"ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள

---

### இறைவனால் அருளப்

5 -ம் பககத் தொடர்ச்சி

பொருள்களையும் வேத முடிபாய உபநிடதத்தின் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக் கொண்டு இனிது விளக்குவது சிவாகமம் ஆதலான், இதனின் வேருய வேதத்தின் பூர்வபக்கப் பொருளைச் சொல்லும் ஏனை நூல்கள் எல்லாம் பூர்வபக்க நூல் எனவும் அதன் சித்தாந்தப்பொருளைச் சொல்லுவதாய சிவாகமம் சித்தாந்த நூல் எனவும் கூறப்படும்.

இச்செய்யுள் சிவாகமத்தின் சிறப்பைக் கூறுகின்றது. இவ்வாறன்றி யுரைப்பனவெல்லாம் போலி என்பதைச் சொற்கிடைக்கை முறையானும மகுடாகமம் முதலியவற்ருனும் உணர்க.

இவ்வுண்மையே தேவாரத்துள்ளும் கூறப்பட்டிருத்தலைக் காணலாம். "தொகுத்தவனருமறை, அங்கம் ஆகமம் வகுத்தவன்" என்ற பகுதியில் மறையைத் தொகுத்தவன், அங்கம் ஆகமத்தை வகுத்தவன் எனக் கூறியிருப்பதன் நுட்பம் ஆயத்தக்கது, வேதத்தைச் சுருக்கமாகவும் ஆழ்ந்த கருத்துடனும் சூத்திர ரூபமாகத் தொகுத்தும், அங்கத்தையும் ஆகமத்தையும் வேதத்துக்குப் பாஷ்யமாக விரித்தும் கூறினர் என்பது அதன் பொருள் என உணர வேண்டும்.

—தொடரும்.

---

அளப்பரும் கரணங்களைன்கும்
சிந்தையேயாகக் குணமொரு
மூன்றும் திருந்து சாத்வீகமாக
இந்து வாழ் சடையானுடும்
ஆனந்தவெல்லையின்"

என்று எடுத்துக்காட்டுகிறது.

யோகப் பயிற்சியைப்பற்றி அவர் கூறுவது மிகவும் சிறப்பாயிருக்கின்றது. வழுதலை வித்திட—யோகப்பயிற்சி செய்தேன், பாகல் முளைத்தது - பாகல் கசப்பானது உலகத்திலே கசப்பு வைராக்கியம் பிறந்தது, புழுதியைத்தோண்டினேன்-பிராரத்துவ கன்மத்தைப் புரட்டினேன், பூசினி பூத்தது - சிவனது திருவருள் வெளியிடப்பட்டது. தோட்டக்காரராகிய மயகாரம் முதலியன ஓடி விட்டார்கள். வாழைக்கனி பழுத்தது - வாழைக்கனி இரண்டாவது வித்தில்லாத கனி, வாழை இரண்டாம் முறையாகக் காய்ப்பதில்லை. எனவே வாழைக்கனி என்பது இனிமேல் பிறவியில்லா நிலையை எடுத்துக்காட்டுறது.

"வழுதலை வித்திடப் பாகல்
முளைத்தது
புழுதியைத் தோண்டினேன்
பூசனி பூத்தது
தொழுது கொண்டோடினர்
தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது
வாழைக கனியே"

இதனுலேதான் வாழைப் பழத்தைக்கோவிலுக்கு நிவேதனம் செய்வார்கள். அது இனிமேல் பிறவி இல்லாமல் இருக்கவேண்டுமென இறைவனை வேண்டுதல் செய்வதைக் குறிக்கும்.

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 6-5-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org